

ஈரோடு, கோவை, திருப்பூர், நீலகிரி ஒருங்கிணைந்த மாவட்ட கழக முன்னாள் செயலாளர் பி.ஏ.சாமிநாதன் அவர்களின் துணைவியார் சம்பூர்ணம்சாமிநாதன் மறைவினையொட்டி கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா அன்னாரின் இல்லத்திற்கு நேரில் சென்று சம்பூரணம்சாமிநாதன் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் சி.ஆர்.ராமச்சந்திரன், அருண்குமார், தினேஷ்குமார், செந்தமிழ் செல்வன், புளியம்பட்டி சிதம்பரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

### மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விவகாரம்:

# அறங்காவலர்களின் உரிமையை நீதிமன்றம் பாதுகாத்துள்ளது !

## முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை,ஆக.4-

சென்னை: மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் குடமுழுக்கு விழா கல்வெட்டில் அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரின் பெயர்களும் இடம்பெற வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

2021-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் 30-க்கும் மேற்பட்ட முறை ஆய்வுகள் மேற்கொண்டோம். மாவட்ட அமைச்சர்கள் மூர்த்தி, தியாகராஜன், மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஒருங்கிணைத்து தொடர்ந்து பணிகளை மேற்கொண்டோம்.

குறிப்பாக, 2018-ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்தால் சேதமடைந்த 79 கல் தூண்களைக் கொண்ட வீர வசந்தராயர் மண்டபத்தை பழமை மாறாமல் முழுமையாக சீரமைத்துக் கொடுத்தோம்.

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் குடமுழுக்கை 17.09.2026 அன்று நடத்துவதற்கான தேதியையும் அன்றைய ஆட்சியிலேயே நிர்ணயம் செய்திருந்தோம்.

குடமுழுக்கு அழைப்பிதழ் தொடர்பாக சட்டப் பேரவையில் இரண்டு முறை கேள்வி எழுப்பினோம். அழைப்பிதழில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் எழுத்துப் பிழைகள் இருப்பதையும், மறைந்த தம்பிரான் ஒருவரின் பெயர் இடம்பெற்றிருந்த நிலையில் மதுரை திருஞான சம்பந்தர் மடாதிபதியின் பெயர் இடம் பெறாததையும் சுட்டிக் காட்டி னோம்.

மேலும், திருக்கோ வில் நிர்வாகத்தில் அறங்காவலர் குழுவுக்குச் சட்டப்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்தும் தொடர்ந்து எடுத்துரைத்தோம். 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் சட்டத்தின்படி அறங்காவலர் குழு என்பது பெயரளவிலான அமைப்பு அல்ல; திருக்கோவில் நிர்வா கத்தில் அதற்கு உரிய சட்டப்பூர்வ அதிகாரமும் பொறுப்பும் உள்ளது என்பதை சட்டப்பேரவையிலும், பத்திரிகைகள் வாயிலாகவும் எடுத்துச் சொன்னோம்.

அறங்காவலர் குழுவின் பெயர்களை குடமுழுக்கு அழைப்பிதழில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு சட்டப்பேரவை வாயிலாக கொண்டு சென்றோம். ஆனால், மாவட்ட அமைச்சர் நிர்மல்குமார், அறங்காவலர்களின் பெயர்களை இடம் பெறச் செய்ய முடியாது என்றும், அதற்கு அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில், அறங்காவலர் குழு உறுப்பினர் சுப்புலட்சுமி நீதிமன்றத்தை அணுகினார். தற்போது நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு இந்த அரசுக்கு மிகப் பெரிய பாடமாக அமைந்துள்ளது.

மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விவகாரத்தில் அறநிலையத்துறை அரசியல் செய்திருப்பதாக நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

அறநிலையத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அந்தக் கருத்தை நீக்குமாறு கோரியபோதும், நீதிபதி அதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிறார்.

மேலும், குடமுழுக்கு விழா தொடர்பான கல்வெட்டில் அறங்காவலர் குழுத் தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களின் பெயர்களும் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அழைப்பிதழ்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், இரண்டு விதமான அழைப்பிதழ்கள் அச்சிட வேண்டிய சூழல் ஏற்படும் என்பதால், குறைந்தபட்சம் கல்வெட்டிலாவது அறங்காவலர்களின் பெயர்கள் கண்டிப்பாக இடம்பெற வேண்டும் என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

திருக்கோயில்கள் சார்பில் கல்லூரிகள் தொடங்குவதற்கு நீதிமன்றம் முழுமையான அனுமதி வழங்கியது எங்கள் ஆட்சிக்குக் கிடைத்த முக்கியமான வெற்றியாகும்.

அதேபோன்று, தற்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அரசாணை மூலம் நியமித்த அறங்காவலர் குழுவின் சட்டப்பூர்வ உரிமைகளை நீதிமன்றம் பாதுகாத்திருப்பது மற்றொரு முக்கியமான வெற்றியாகும்.

கடந்த காலத்தில் நடைபெற்றது சட்டத்தின் ஆட்சி என்பதற்கு இந்த நீதிமன்றத் தீர்ப்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அறங்காவலர் குழுவின் உரிமையை நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ள இந்தத் தீர்ப்பில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

### நூறு நாள் த.வெ.க. ஆட்சியில் போராடிய

# விவசாயிகளின் மீதான வழக்கையும் தள்ளுபடி செய்வீர்களா?

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேள்வி!

சென்னை, செப். 4-

சட்டப்பேரவையில் முதலமைச்சர் 110 விதியின் கீழ் அறிக்கை ஒன்றினை படித்தார். அதில் விவசாயிகள் மீதான வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படுவதாக அறிவித்தார். அதன் பிறகு நடைபெற்ற விவாதத்தில் முன்னாள் அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது:



பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் விவசாயிகள் போராடியபோது பதியப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்து இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்த நூறு நாள் ஆட்சியில் விவசாயிகள் பல ஊர்களில் எல்லாம் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள் மீது வழக்கு பதிந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் தள்ளுபடி செய்யப்படுமா என்று ஒரு கேள்வி எழுகிறது.

எங்கள் ஆட்சியில் செய்தார்கள் என்று சொல்கிறார்கள், உங்கள் ஆட்சியில் நூறு நாளில் விவசாயிகள் கடன் ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்து போராடியவர்களை கைது செய்து மண்டபத்தில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அந்த வழக்கையும் தள்ளுபடி செய்வீர்களா? என கேட்க விரும்புகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பினார்.

# இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, செப்.4-

இராணிப்பட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர். காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க, செயற்குழுக் கூட்டம் 07.09.2026 திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையிலும், தலைமை கழக பிரதிநிதிகள் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், தலைமை கழக தணிக்கைகுழு உறுப்பினர், வழக்கறிஞர் ஏ.சரவணன் ஆகியார் முன்னிலையிலும் பாரதிநகர், சிப்காட், ஜீ.கே.மில்லினியா ஹோட்டலில் நடைபெறுகிறது.

எனவே, இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

தலைமைக் கழக மறுசீராய்வு குறித்து,

செப்.15 அண்ணா அறிவாலத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழா குறித்து,

கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் ஆர். காந்தி தெரிவித்துள்ளார்.

### மைலம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

# கழகத்தில் புதிய உறுப்பினர்களை சேர்க்க தீவிரமாகப் பணியாற்றுவோம்!

## மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் அறிவுறுத்தல்!

மைலம், செப்.4-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மயிலம் வடக்கு ஒன்றியம் தீவனூரில் உள்ளஜி.கே. திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அமைத்தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் சேதுநாதன், அண்ணா துரை ,ராஜா ராமன் துரை, செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் அனைவரையும் வரவேற்ற அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் அவர் பேசுகையில்:

கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின்அறிவுறுத்தலின்படி கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

அந்த வகையில் 45 வயதுக்குஉட்பட்ட புதிய உறுப்பினர்களை கழகத்தில் சேர்ப்பதற்கு திமுக நிர்வாகிகள் தங்களது பணியை தீவிரப்படுத்த வேண்டும். இந்த இயக்கத்தை இன்னும் 200 ஆண்டுகளுக்கு வழி நடத்த வேண்டும். திமுக நிர்வாகிகள்கூடுதலாக கவனம் செலுத்திதங்களது வீட்டில் உள்ள பிள்ளைகளை திமுக இயக்கத்தில் உறுப்பினராக சேர்க்கும் பணியை செய்ய வேண்டும்.

மேலும் தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள் 200 சதவீதமாக எந்த ஒரு தொய்வு இல்லாமல் பணி நடைபெறுவதற்கு உறுதிமொழி எடுத்துக் கொள்வதாகவிழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானம் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் அருணகிரி, அமுதா ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை, உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சி, வார்டு கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி மாறன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

# லீபுரம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, செப்.4-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், லீபுரம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் தலைமையில் ஆமணக்கன் விளை பகுதியில் வைத்து நடைபெற்றது.



கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என். தாமரைபாரதி, பேரூர் செயலாளர்கள் எஸ். வைகுண்ட பெருமாள், G.முத்து, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட விவசாய அணி தலைவர் K.முத்துசாமி, அஞ்சுகிராமம் பேரூராட்சி துணைத் தலைவர் செ.காந்திராஜ், கழக நிர்வாகிகள் D.அரிகிருஷ்ண பெருமாள், P.வென்சி லாஸ், சந்திரசேகர், N.சுயம்பு, ஐயப்பன், ராதாகிருஷ்ணன், V.கிங், சைஜி, J.ஆன்றோ போஸ்கோ உட்பட ஒன்றிய நிர்வாகி கள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

லீபுரம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள சுற்றுலா தலமான வட்டகோட்டை பகுதியில் சுற்றுலா பயணிகள் கடற்கரை பகுதிக்கு சென்று வர அமைக்கப்பட்டிருந்த பாதையானது மிகவும் சேதமடைந்து தற்போது சுற்றுலா பயணிகள் கடற்கரை பகுதிக்கு செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே அந்த சாலையை சீரமைத்து தர மாவட்ட நிர்வாகத்தை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அறிவிப்பு!



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் 06.09.2026 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையிலும், தலைமைக் கழகப் பிரதிநிதிகள் இ.கருணாநிதி, தாயகம்கவி ஆகியோர் முன்னிலையிலும் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்:** கழக தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி கழக நிர்வாக அமைப்பு சீரமைப்பது குறித்து , செப் 15 அண்ணா பிறந்தநாள், செப் 17 பெரியார் பிறந்தநாள் கொண்டாடுவது, செப் 15 அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் பங்கேற்பது மற்றும் கழக ஆக்கப்பணிகள்

**ஏ.பி.நந்தகுமார்**
செயலாளர்
வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தீவனூரில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானம் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந்தலைவர்கள் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், வல்லம் அமுதா ரவிக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.